மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, விவரம் சொல்வதற்கு முதலமைச்சர் ஏன் வரவில்லை என்று அக்கறை காட்டி எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதற்கு நன்றி தெரிவித்து, உடல் நலம் இல்லாத காரணத்தால் வரவில்லை என்ற செய்தியை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்புகள்.

அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளின் 6 (1) வது விதியின்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. பி. எச். பாண்டியன்
2. திரு. கு. வடிவேல்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. பொ. விஜயராகவன்

ஆ. அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் 193(1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1979–80-ம் ஆண்டுக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதல் அமைச்சர்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்